ஸ்ரீ ராமஜெயம்

**சோபகிருது வருஷ (2023 - 2024)**

**விசேஷ தினங்களும், தேவ, பித்ரு, பூஜா ஸங்கல்பங்களும்** அடங்கிய

# பஞ்சாங்கம்

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

(REGD.)

பிளாட் # 22, ஆழ்வார்திருநகர் அனெக்ஸ் 2வது மெயின் ரோடு,
ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087.
E-mail : ksmani1967@gmail.com
Website : **www.nkmysamithi.org**



**தொகுப்பாளர்**

**K.S. மணி சாஸ்திரிகள்** (சென்னை)

பஞ்சாங்கம் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு மட்டும்
இந்த கைபேசியில் தொடர்பு கொள்ளவும் +91 89390 38323

# நித்யகாம்ய மஹாயக்ஞஸமிதி

**ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**
**வேதபரிபாலன டிரஸ்ட் வேத பாடசாலை**
ஆழ்வார் திருநகர், சென்னை–600 087.



**பாடசாலைக்கு நன்கொடை அளிப்பவர்களுக்காக பேங்க் விபரம்**

**Sri KRISHNA PREMI SWAMIGAL VEDHA PARIPALANA TRUST**
**A/c No.31324634054,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

**ரிக் வேத பாடசாலை**
135, கீழ கிராமம், கடையநல்லூர், நெல்லை மாவட்டம்



**பாடசாலைக்கு நன்கொடை அளிப்பவர்களுக்காக பேங்க் விபரம்**

**NITYA KAMYA MAHA YAGNYA SAMITHI**
**A/c No.34747513411,** IFS CODE SBIN 0001683 SWIFT
**STATE BANK OF INDIA**
WEST MAMBALAM BRANCH, CHENNAI - 600 033

---

**கீழே கொடுக்கப்பட்டுள்ள செல் நம்பர் வாட்ஸ்ஆப்பில் நன்கொடை அளிப்பவர்கள் கண்டிப்பாக பெயர், விலாசம், போன் நம்பர், தெரிவித்தால்தான் ரசீது அனுப்ப வசதியாக இருக்கும்.**

---

**K.S.மணிசாஸ்திரிகள் – 9841026438**




## ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம சகஸ்ர கோடி பாராயணம் அழைப்பு


ஆன்மீக அன்பர்களே! ஆசீர்வாதம்.

இப்பெழுது, உலகளவில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை தீர வேண்டும் என்று பிரார்த்தித்து **அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்** சார்பில் லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் நடைபெறுகிறது. இதில் கலந்து கொண்டு தங்களது அனைத்து பிரச்சனைகள் தீரவும், நலமுடன் வாழவும் தங்களின் பங்களிப்பான ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம் பாராயணம் தினசரி காலை மாலை செய்து 9962265105, 7299051505 என்ற இரண்டு எண்களில் வாட்சப் குரூப்பில் தங்களது பாராயணத்தை பதிவு செய்து அனுப்பி வைக்க வேண்டும் என வேண்டுகிறோம்.

இப்படிக்கு

**அகிலலோக ஸ்ரீ தசமஹாவித்யா பீடம்,**

No.36, Vijaya Garden, Uthukadu Walajabath, Kanchipuram - 631605, Tamilnadu, India.



## ஸ்ரீ காஞ்சி ஸ்ரீஸ்ரீ பரமாச்சார்ய மஹா ஸ்வாமிகள்

மனஸை ஸரியாக ஆக்கிக் கொண்டாலொழிய எவனும் ஸௌக்யமாயிருக்க முடியாதென்பதால் அப்படிப் பண்ணிக் கொள்வதற்கான ப்ராத்தனையோடு வெளி ஸௌகர்யங்கள் எத்தனை இருந்தாலும், மனஸ் நல்லபடியாக இருந்தால்தான் ப்ரயோஜனமுண்டு. இல்லாவிட்டால் துக்கம்தான், அழுகைதான், பயமும் சஞ்சலமும்தான். வெளி ஸௌகர்யங்கள் எதுவுமே இல்லாவிட்டாலும்கூட, மனஸ் மட்டும் இருக்க வேண்டிய மாதிரி இருந்து விட்டதோ, அப்போது ஒரு கஷ்டமும் தெரியாது. இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்று அப்பர் ஸ்வாமிகள் சொன்ன மாதிரி ஸதானந்தமாக இருந்து கொண்டிருக்க முடியாது.



## ஸ்ரீஸ்ரீ காஞ்சி ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

நம்மிடம் நமக்குள்ள பிரியத்தினால்தான் நமது நிறைவை வேண்டியே சேவை செய்கிறோம். பத்தினியிடமும், பிள்ளையிடமும் மற்றவற்றிடமும் நாம் வைக்கிற பிரியத்துக்கெல்லாம் உண்மையில் நம்மிடமே உள்ள பிரியம்தான் காரணம். நம் உள்ள நிறைவுக்காகத்தான் மற்றவரிடம் பிரியம் காட்டுகிறோம் என்பது யாக்ஞவல்கியரின் உபநிஷத உபதேசம் பகவானிடம் பிரியம் வைத்து நாம் பூஜை செய்தாலும் சரி, உலகத்திடம் பிரியம் வைத்து சமூக சேவை செய்தாலும் சரி. அதெல்லாம் கூடத் தனக்கு ஒரு நிறைவை உண்டாக்கிக் கொள்வதற்காக, நம்மிடமே நமக்குள்ள பிரியத்தால் செய்வதுதான்.



## ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

வேதம் வகுத்த வழியைத் தினந்தோறும் பின்பற்ற வேண்டும். வேதம் கூறுகிறபடி கர்மங்களைத் தவறாமல் அநுஷ்டானம் பண்ணுங்கள். இதையே ஈஸ்வர பூஜையாக நினைத்து பண்ணுங்கள். ஆசை வாய்ப்பாட்டு நம் மனசுக்குப் பிடிக்கிற காரியங்களைச் செய்வது என்பதில்லாமல், லோக உபகாரமாக செய்வதால், சேவை செய்வதால், அல்லது ஸ்வாமிக்குப் பூஜை செய்வதால் அவனவனுக்கும் உள்ளுக்குள்ளே ஒரு நிறைவு ஏற்படுகிறது. நாம் செய்கிற சேவையில் மற்றவர்களுக்கு உண்மையான லாபம் இருந்தாலும் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம். நம் சேவை அவர்களுக்குத் தேவைப்படாமலும் இருக்கலாம். ஆனால் அதைச் செய்யும்போதே நமக்கே திருப்தியும் சந்துஷ்டியும் அமைதியும் உண்டாகின்றன.



## ச்ருங்கேரி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹா ஸ்வாமிகள்

ஞான அக்னியானது கர்மாக்களின் பலன்களை எரிக்க வல்லது. பிறப்பும் இறப்பும் இருக்கும் வரை கஷ்டங்களும் துக்கங்களும் ஒருவனுக்கு இருந்துகொண்டேயிருக்கும். அவை இருக்கும் வரை முக்தி என்பதுமில்லை. எனவே, ஆத்ம ஞானமே, முக்திக்கு வழி ஆதலால் அந்த ஞானம் மனிதனால் அடையப்பட வேண்டியதாகும். அப்பொழுதுதான் நமது வாழ்க்கை பூரணமடையும். அப்படிப்பட்ட ஞானம் அடைந்தவன் பிறப்பு இறப்புக்களால் பாதிக்கப்படுவது இல்லை. அவன் முக்தனாகிறான். அப்படிப்பட்ட ஞானத்தை அடையாதவன் பந்தத்தில் சிக்கிக் கொள்கிறான். எனவே, ஆத்ம ஞானம் அடைவதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்.



## ஸ்ரீஸ்ரீ அண்ணா (ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்)

குரு என்பவர் நம்மை உற்சாகப்படுத்துபவர் அல்ல. நமக்கு ஆறுதல் சொல்வதும், தைரியப்படுத்துவதும் ஊக்குவிப்பதும் அவர் வேலை கிடையாது. நாம் வைத்திருக்கும் சில எல்லைகளைத் தகர்த்து எறிவதுதான் அவரின் நோக்கம் என்பது பக்தி. எதைக் கொடுத்தாலும் என்னுடன் இரு என்பது சரணாகதி. குருவை சரணாகதி அடைய வேண்டும். பகவத் கீதையில் இருந்தோ, பைபிளில் இருந்தோ, குரானில் இருந்தோ இரண்டு பக்கங்களைப் படபடவென்று உணர்ச்சிவசப்படச் சொல்லிவிட்டாலே, அவரைக் குருவாக நினைத்து விட வேண்டாம். மத போதகர் வேறு, குரு வேறு. குருவை விட சிரேஷ்டமானவர் இல்லை நமக்கு. அவரிடத்தில் பூர்ணமான நம்பிக்கை ஏற்பட வேண்டும். அது நிஜமான நம்பிக்கையாக இருக்க வேண்டும்.